**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.**
**O.S.No.70 of 2021**

நாள் 11.09.2023 P.W.2 -- கலியமூர்த்தி (எ) ராயர்

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

1. நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். சுந்தரராசு தான் இறப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பாகவே உடல் நலம் இல்லாத காரணத்தினால், மருத்துவமனை சென்றுவர இருந்தார் என்று சொன்னால் சரிதான். முதல்விசாரணையில் நான் குறிப்பிட்டுள்ள நான்கு ஏக்கர் கிரயம் பற்றி, எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். நான்கு ஏக்கர் நிலங்களில் புஞ்சை மூன்று ஏக்கர், நஞ்சை ஒரு ஏக்கர் ஆகும். கீழகொண்டலபாடி கிராமத்தில் உள்ள நிலங்கள் மூன்று ஏக்கர் புஞ்சை நிலங்களாகும். கீழகொண்டலபாடி கிராமத்தில் சுந்தரராசுவிற்கு நிலங்களே இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி நிலங்களில் சுந்தரராசு அவர் வாழ்நாளில் என்ன மகசூல் செய்து வந்தார் என தெரியுமா என்றால், நெல், உளுந்து விதைக்கலாம். நெல் மற்றும் உளுந்து ஆகியவைகளை பயிரிட்டு வந்தார்.

2. 2012 ஆம் வருடத்திற்கு பிறகு, சுந்தரராசு எந்த பயிரையும் செய்யவில்லை, ஏனெனில் அவருக்கு கிட்னி கோளாறு ஏற்பட்டுவிட்டது. அவர் இறக்கின்ற காலக்கட்டத்தில் சுந்தரராசுவின் அண்ணன் விஸ்வகேது பயிர் செய்து வந்தார் என்றால் இல்லை. 2012 ஆம் வருடத்திற்கு பின்பு சுந்தரராசுவின் உடல்நிலை காரணமாக அவரது மனைவி தனகோடி பயிர் செய்து வந்தார். 2012 ஆம் வருடத்திற்கு பிறகு தனகோடி எவ்வித விவசாய நடவடிக்கையும் செய்து வரவில்லை, நான் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால், சரியல்ல. நானும் ராமசாமி(வாதி)யும், தனகோடிக்காக ஏழு வருடமாக பயிர் செய்து வந்தோம். சுந்தரராசு காலமான சமயத்தில் அவரது தாயார் லட்சுமியம்மாள் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். சுந்தரராசு இறந்து ஒரு மாதத்தில் அவரது தாயார் லட்சுமியம்மாள் காலமாகிவிட்டார் என்றால், சரியல்ல. ஒன்றரை வருடம் கழித்து லட்சுமியம்மாள் இறந்தார்.

சுந்தரராசு இறந்த பிறகு அவரை புதைத்தார்களா அல்லது எரித்தார்களா என்றால் புதைத்தார்கள். சுந்தரராசு இறந்தபிறகு ஈமச்சடங்குகளை சுந்தரராசுவின் அண்ணன் விஸ்வகேது செய்தார் என்றால் சரியல்ல, ராமசாமி(வாதி) தான் சுந்தரராசு விற்கும் தனகோடிக்கும் ஈமச்சடங்குகளை செய்தார். சுந்தரராசு இறந்து எத்தனை வருடங்களில் தனகோடி இறந்தார் என்றால் ஒன்றரை, இரண்டு வருடங்களில் இறந்துவிட்டார். தனகோடி கடலூர் தாலுக்கா, ராமாபுரத்தில் இறந்தார் என்றால் சரிதான். தனகோடியின் உடல் திட்டுகாட்டுருக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு தான் அடக்கம் செய்யப்பட்டது என்றால் சரிதான். தனகோடியின் இறப்பிற்கு பிறகு அவரது இறுதிசடங்குகளையும் ஈமச்சடங்குகளையும் பிரதிவாதி விஸ்வகேது செய்தார் என்றால் சரியல்ல. வாதி ராமசாமி கரும காரியங்களை செய்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக தெரிவிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தனகோடி இறந்தபிறகு கரும காரியம் செய்யவில்லை என்றால், ஆமாம், எட்டாம் நாள் துக்கம் மட்டும் செய்தார்கள்.

3. எட்டாம்நாள் துக்கம் முடிந்தவுடன் எத்தனை நாள் கழித்து நாங்கள் தனகோடியின் பீரோவை திறந்து பார்த்தோம் என்றால், எட்டாம் நாள் துக்கம் முடிந்தவுடனேயே ஊரார் முன்னிலையில், தனகோடி அம்மாள் வீட்டுக்கு சென்று, அவரது பீரோவை திறந்து பார்த்தோம். ஊரார் என்று குறிப்பிடும் நபர்களின் பெயர்களை கூற முடியுமா என்றால், என் மனைவியின் சகோதரிகள், ராசமாணிக்கம் மற்றும் ஊர்க்காரர்கள் சிலர் இருந்தார்கள். அவர்களின் பெயர்கள் தற்போது நினைவில்லை. அந்த பீரோவின் சாவி என்னிடம் தான் இருந்தது. ஆறுமுகம் என்பவரின் இறப்பிற்கு வந்த தனகோடியிடமிருந்து நான் பீரோ சாவியை எடுத்துக்கொண்டேன் என்றால் இல்லை. தனகோடி என்னிடம் ஆறுமுகம் என்பவரின் இறப்பிற்கு வந்தபோது பீரோசாவியையும் ஒரு பையையும் என்னிடம் கொடுத்தார்.

4. நான் புவனகிரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள மனையில் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் மூன்று வருடங்களாக அங்கு வசித்து வருகின்றேன். இறப்பிற்கு எங்கள் வீட்டிற்கு வந்து, வேனில் செல்லும்போது சாவியை தனகோடி என்னிடம் கொடுத்தார். தனகோடி என்னிடம் சாவி கொடுத்தது தப்பு என்றும், வழக்கிற்கு மூல காரணம் நான் தான் என்று சொன்னால் சரியல்ல. பீரோவை திறந்து பார்த்தபோது என்னவெல்லாம் இருந்தது என்றால், பத்திரங்களும் உயில் ஆவணமும் இருந்தது. என்னென்ன பத்திரங்கள் என்று எனக்கு தெரியாது. பீரோவில் இருந்த பத்திரங்களை யார் எடுத்து சென்றார் என்றால், வாதி ராமசாமி தான் எடுத்து சென்றார். எட்டாம் துக்கம் அன்று பீரோவில் பத்திரங்களை எடுப்பதற்கு முன்பு, சொத்துக்களை உரிமை கொண்டாடுவது தொடர்பாக ஏதேனும் பிரச்சினையோ, பேச்சுவார்த்தையோ இருந்ததா என்றால் பிரச்சினை இருந்தது. யார் தகராறு செய்தது என்றால், மருத்துவ செலவிற்கு தான் தான் எல்லா செலவுகளையும் முன்னின்று பார்த்ததால் சொத்தை தான் மட்டுமே எடுத்துக்கொள்வதாக ராமசாமி கூறினார். இவ்விவரம் தொடர்பாக ராமசாமி பேப்பர் விளம்பரம் அளித்த தகவல் தெரியுமா என்றால், தெரியாது. உயிலில் எந்த சொத்து பற்றி எழுதப்பட்டுள்ளது, யார் கையெழுத்து போட்டார்கள் போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். எட்டாம் துக்கம் முடிந்தபிறகு பீரோவிலிருந்து உயில் ஆவணம் எதனையும் எடுக்கவில்லை என்றும், அதனை நான் பார்க்கவும் இல்லை என்றும், வழக்கின் வாதிக்கு ஆதரவாக நான் உயில் ஆவணம் எடுக்கப்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. <u>மறுவிசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*